திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி: டிசம்பர் 3 முதல் மழை பெய்யும்**

அந்தமான் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் டிசம்பர் 3-ம் தேதி முதல் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவானது. அது புயலாக மாறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வலுவிழந்தது. இதனால் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை.

ஏற்கெனவே தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்ட நிலையில், வடகிழக்குப் பருவமழையும் இதுவரை போதிய அளவு பெய்யவில்லை.

இந்நிலையில் அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் மீண்டும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடகிழக்குப் பருவமழை சரிவரப் பெய்யாததால் கவலையில் உள்ள விவசாயிகளுக்கு இது ஆறுதல் அளிக்கும் விதமாக உள்ளது.

இது குறித்து வானிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் ரமணன் கூறியது:

புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அந்தமான் கடலில் உருவாகியுள்ளது. இது தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. இந்த தாழ்வுப் பகுதி அடுத்த 48 மணி நேரத்துக்குள் தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் டிசம்பர் 3-ம் தேதி முதல் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார் அவர்

**வேறென்ன செய்ய?**

ஒரு துளித் தண்ணீர் கூடக் கொடுப்பதற்கு இல்லை என்று கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷெட்டர் கூறிவிட்டார். "கர்நாடகத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது, எங்களுக்கே தண்ணீர் போதாது; ஆகவே தர இயலாது' என்பதுதான் கர்நாடக முதல்வர் ஷெட்டர் அளித்துள்ள பதில். ஒரு மணிநேரப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு தமிழக முதல்வருக்குக் கிடைத்துள்ள பதில் இது.

கர்நாடக மாநிலத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது என்பது தமிழக முதல்வருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவேதான், கர்நாடகம் சட்டப்படி வழங்க வேண்டிய 52.8 டிஎம்சியை வலியுறுத்தாமல், அதில் பாதியளவாக 30 டிஎம்சி தண்ணீரை மட்டுமே கேட்டார். இதை நன்றாகவே புரிந்துகொண்ட கர்நாடக முதல்வர், "எங்களுக்கும் பற்றாக்குறை. உங்களுக்கும் தட்டுப்பாடு. அதனால் நீங்கள் கேட்பதில் பாதியைத் தருகிறேன். இருவரும் இருக்கும் தண்ணீரைப் பங்கு போட்டுக் கொள்வோம்' என்று சொல்லி இருந்தால், இருதரப்பு விவசாயிகளும் அவரைப் பாராட்டி இருப்பார்கள். ஆனால், அவர் சொன்ன பதில், ஒரு துளித் தண்ணீர்கூடக் கிடையாது என்பதுதான்.

காவிரி என்பது கர்நாடகத்தின் நதியோ அல்லது தமிழகத்தின் நதியோ அல்ல. அது இந்திய நதி. சொல்லப்போனால் மனித குலம் தழைக்க இயற்கை தந்திருக்கும் கொடை. அதில் ஓடும் தண்ணீரை இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்வதுதானே நியாயமாக இருக்கும்.

ஓராண்டில் எவ்வளவு தண்ணீர் ஓடுகிறது, அதில் எவ்வளவு தண்ணீரை எந்தெந்த மாநிலம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பற்றாக்குறை காலத்தில், இருக்கும் நீரை எவ்வாறு இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும்கூட நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது பற்றாக்குறை காலம் என்பது தெரிந்துதான் தமிழக முதல்வர், தமிழகத்துக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய நீரின் அளவில் பாதியைக் கேட்டார். ஆனால், ஒரு துளிகூடத் தர முடியாது என்று கர்நாடக முதல்வர் சொல்கிறார் என்றால், பற்றாக்குறை காலத்தில் பகிர்ந்துகொள்ள நடுவர் மன்றம் நிர்ணயித்த அளவுகோலுக்கு என்ன மரியாதை?

"நானே திண்டாட்டத்தில் இருக்கிறேன்' என்று வெறுங்கையுடன் திருப்பி அனுப்ப தமிழ்நாடு என்ன கடன் கேட்டா செல்கிறது? பற்றாக்குறை நாளில் அவர்களே காவிர் நீர் முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளவும், மிகைநீர் நாள்களில் போனால் போகிறது என்று சாக்கடையில் விடுவதைப்போல தமிழகத்துக்குத் தண்ணீர் விடுவதும்தான் கர்நாடகத்தின் செயல் என்றால், தமிழ்நாடு இந்தியாவின் ஒரு அங்கமா இல்லையா என்று மத்திய அரசைக் கேள்வி கேட்கத் தோன்றுகிறது.

உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசைக் கிடுக்கிப்பிடிபோட்டு நிறுத்தாமல், தமிழக அரசைப் பார்த்து, ""நீங்கள் போய் பேசிப் பாருங்கள்'' என்று ஆலோசனை வழங்கியதால்தானே, நிச்சயம் தர மாட்டார்கள் என்று தெரிந்தும் முதல்வர் ஜெயலலிதா பெங்களூரு போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

பேச்சுவார்த்தையால் பயன் இல்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா போகாமல் இருந்திருந்தால், "நாங்கள் சொன்னோம், தமிழ்நாடு முதல்வர் பேசிப் பார்க்கவில்லை' என்று நீதிமன்றம் சொல்லும். எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழக முதல்வர் ஜெயலலிதா போய்ப் பேசியிருந்தால், தமிழகத்துக்குத் தண்ணீர் விடுவதற்குக் கர்நாடகம் தயாராக இருந்தது' என்று அறிக்கை விடுவார்கள். விவசாயிகள் பற்றிய அக்கறை இருந்திருந்தால் முதல்வர் கௌரவம் பார்க்கக்கூடாது என்று நீள்நாக்கால் நாலும் பேசுவார்கள்.

எல்லா குற்றச்சாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும்வகையில், கர்நாடக முதல்வருடன் பேச்சு நடத்தி, அவர்கள் தர வேண்டியதில் பாதி அளவு நீரைக்கூடத் தர மறுத்துவிட்டார்கள் என்பதை உலகுக்கும், நீதிமன்றத்துக்கும் புரிய வைத்திருக்கிறார் தமிழக முதல்வர். இப்போது நீதிமன்றம் என்ன ஆலோசனை வழங்கப் போகிறது? யாருக்கு ஆலோசனை வழங்கப்போகிறது?

ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட நியாயம் மறுக்கப்படும்போது கர்நாடக மாநிலத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும், காவிரி நதியையும் அணைகளையும் தன்பொறுப்பில் ஏற்று நீரை, பற்றாக்குறை காலத்திற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டபடி பகிர்ந்தளிக்க வேண்டிய மத்திய அரசு, அரசியல் கருத்து வேறுபாடுகளுக்காகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அதிமுக இடம்பெறவில்லை என்ற காரணத்துக்காகவும் பாராமுகமாகச் செயல்படுவதால்தானே தமிழகம் நீதிமன்றத்தை நாடிப்போகும் நிலை ஏற்பட்டது.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் திமுக, காங்கிரஸ் கட்சிகளும் அவற்றின் சார்பில் அமைச்சர் பதவியில் இருப்போரும், தமிழக விவசாயிகளுக்காக மத்திய அமைச்சரவையில் குரல் எழுப்பியிருந்தால், கர்நாடக அரசு இப்படியொரு பதிலை அளிப்பதற்கு ஆயிரம் முறை யோசித்திருக்காதா?

பேச்சுவார்த்தைக்கு வரும்போதே, ஜெயலலிதா பிடிவாதம் காட்டக்கூடாது என்றும், ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று தண்ணீர் கொடுத்தால் எங்களை மக்கள் ஓடஓட விரட்டுவார்கள் என்றும் காவிரி பாதுகாப்புக் குழுத் தலைவர் மாதே கௌடாவால் முந்தைய நாளே, ""தண்ணீர் இல்லை'' என்று மறைமுகமாகச் சொல்லும்படி செய்வார்களா?

""நீதிமன்றத்திடம் ஆயிரம் காரணம் சொல்லலாம்; தீர்ப்பை அமல்படுத்தாமல் கண்டனத்துக்கும் ஆளாகலாம்; நம் ஆட்சியைக் கலைத்துவிட மாட்டார்கள்; அணைகளை மத்திய அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொள்ளாது; ஏனென்றால் காங்கிரஸ் கட்சிக்குத் தமிழகத்தின் நலனைவிடக் கர்நாடகத்தில் ஆட்சியைப் பிடிப்பது முக்கியம்; தமிழகத்துக்காகக் குரல் கொடுக்க மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் வேட்டி கட்டிய தமிழர்கள் யாரும் இல்லை", என்கிற தைரியம்தானே கர்நாடகத்திற்கு இத்தகைய துணிவைத் தந்திருக்கிறது?

இனி உச்ச நீதிமன்றம் என்ன சொல்லப் போகிறது, மத்திய அரசு என்ன சொல்லப் போகிறது என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதல்லாமல் நமக்கு வேறென்ன வழி?

பாரதியின் வைரவரிகள்தான் நினைவுக்கு வருகின்றன - ""ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே!"

**அரிசி விலை உயர்வது ஏன்**

உணவுக் கார்ப்பரேஷனும் சரி, மாநில சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன்களும் சரி, உணவு தானியக் கொள்முதலில் காட்டும் வேகத்தை வினியோகத்திலும், ஏற்றுமதியிலும் காட்டுவதில்லை; இதனால் உணவு தானியங்கள் தேங்கிக் குவிந்து வீணாவதுடன், சீரான வினியோகம் இல்லாததால் விலை ஏற்றத்தையும் தவிர்க்க முடியவில்லை.

பல கோடி டன்கள் கோதுமையும் அரிசியும் தேங்கியுள்ள நிலையில் விலை உயர்வது வியப்பாயுள்ளது. ஏற்றுமதியில் வேகம் இல்லை. உள்ளூர் வினியோகத்திலும் வேகம் இல்லை.

÷ஜூலை 2013-ஐ நெருங்கும்போது நமது கோதுமை + அரிசி இருப்பு 10.6 கோடி டன்கள் அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை 2012-இல் கையிருப்பு 52 மில்லியன் டன் கோதுமையும் 30 மில்லியன் டன் அரிசியும் சேர்த்து 82 மில்லியன் டன்கள். ஒரு மில்லியன் என்பது பத்து லட்சமாகும். அதில் "ரிசர்வ் ஸ்டாக்' 3.2 கோடி டன்கள் போகத் தேக்கம் 5 கோடி டன்கள்.

அக்டோபர் 2012-இல் பொது வினியோகம் - ஏற்றுமதிக்குச் செலவழித்தது போக எஞ்சியவை 6.6 கோடி டன்கள். கோதுமை 4.3 கோடி டன்கள். அரிசி 2.3 கோடி டன்கள். "ரிசர்வ் ஸ்டாக்' 2.1 கோடி டன்கள். தேக்கம் 4.5 கோடி டன்கள். "ரிசர்வ் ஸ்டாக்' என்பது "உள்ளூர்த் தேவைக்குமேல் ஏற்றுமதிக்கு' என்று பொருள் கொள்ளலாம். "ரிசர்வ் ஸ்டாக்'கும் தேக்கமுற்றுள்ளதின் பொருள், ஏற்றுமதியிலும் வேகம் குறைவு!

÷2013-14-இல் நெல் வடிவில் அரிசிக் கொள்முதல் 2 கோடி டன்கள் என்றும், கோதுமைக் கொள்முதல் 4 கோடி டன்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டு கரீஃப் அரிசி, ரபி கோதுமை உற்பத்தி உயர்வாகவே மதிப்பிடப்பட்டுள்ளது.

புதிய வரவாக 6 கோடி டன் உணவு தானியங்கள் இருப்பு வைக்கும் நேரத்தில், பழைய இருப்பில் சுமார் 3 கோடி முதல் 4 கோடி டன்கள் வீணாகும் அபாயம் உள்ளது.

எனினும் அரசு தரப்பு அறிக்கைப்படி 2010-11, 2011-12 ஆண்டுகளில் எஞ்சிய இருப்பு 14 மில்லியன் டன்களை "மனித உணவாகப் பயன்படுத்த முடியாது' என்ற சான்றிதழுடன் சாராயத்திற்கோ, கால்நடைக்குரிய அடர் தீவனமாகவோ ஏலத்திற்கு விடப்படலாம்.

2ஜி, நிலக்கரிபோல் ""விலையில்லாமல்'' அள்ளிக்கொள்ள வாய்ப்பிருந்தால் உணவு அமைச்சருக்கு "யோகம்' உண்டு. கெட்டுப் போய்விட்டதாகச் சொல்லப்பட்டு ஏலத்துக்கு வரும் அரிசி-கோதுமையில் முக்கால் பங்கு, "மனிதர் உண்ண' வெளி அங்காடிக்கு வரும் என்றாலும் அப்படிப்பட்ட வழங்கலிலும் வேகம் காட்டமாட்டார்கள்.

வேறு தில்லுமுல்லுகளும் உண்டு. "நிஜமாகவே கெட்டுப்போனதை', "நல்ல சரக்காக' பொது வினியோகத்திற்கு அனுப்பி, "கெட்டுப்போனதாக' முத்திரை குத்தப்பட்ட "நல்ல சரக்கு' ஏலமாகவோ, ஏலமில்லாமலோ வெளி அங்காடிகளுக்கு மெல்ல மெல்ல வரலாம். யாருக்குத் தெரியும்?

கோதுமை ஏற்றுமதி ஆகஸ்டு 2012 முதல் தொடங்கப்பட்டது. 10 லட்சம் டன் ஒதுக்கப்பட்டாலும் இன்று வரை 5 லட்சம் டன்களே ஏற்றுமதியாயின. விற்ற விலை டன்னுக்கு ரூ.16,470 முதல் ரூ.17,604. கோதுமை ஏற்றுமதியில் தனியார் அனுமதி இல்லை. பொதுத்துறையின் (அரசுத் துறையின்) ஏற்றுமதி இருப்பினும் கோதுமை விலை உயர வேண்டிய அவசியம் இல்லை.

விலை உயர்வுக்கு அடிப்படையான காரணம் வெளி அங்காடிக்குரிய கோதுமை வழங்கலில் ஏற்பட்டுள்ள குளறுபடியே. சுமார் 4 கோடி டன்னுக்கு மேல் இருப்பை வைத்துள்ள உணவுக் கார்ப்பரேஷன் வெளி அங்காடித் தேவையை நிறைவு செய்யாதது வியப்பாயுள்ளது!

இந்தியாவின் கோதுமை வியாபாரம் முற்றிலும் அரசு நிறுவனமான "இந்திய உணவுக் கார்ப்பரேஷன்' வசம் உள்ளதால் அங்காடித் தேவையை நிறைவு செய்யாமல் ""பெருந்தன்மைப் பதுக்கலை''ச் செய்வது ஏன்? தனிப்பட்ட வியாபாரி செய்தால் தண்டனைக்குரிய பதுக்கல், அதையே அரசு செய்தால் "பெருந்தன்மைப் பதுக்கல்'.

கோதுமை விலை குறைய பழைய இருப்புகளைச் சற்றுத் தள்ளுபடி விலையில் வெளியில் வழங்கலாம். "உருட்டு மாவு ஆலை' (ரோலர் பிளவர் மில்) அதிபர்கள் தமிழ்நாட்டில் அதிகம். ஆட்டா, ரவா, சேமியா, மைதா விலைகள் குறைய வாய்ப்பு இருந்தும் தமிழ் நாட்டில் உள்ள "உருட்டு மாவு ஆலை'களுக்கு மலிவு விலை கோதுமை கிடைப்பது இல்லை.

இதற்கு மாறாக, நிறைய இருப்பு இருந்தும்கூட தேவையில்லாமல் அதிகபட்ச விலையை மேலும் மேலும் உயர்த்தி சேமித்து வீணாக்குவதுதான் பொதுத்துறையின் பெருந்தன்மைப் பதுக்கலா?

÷கோதுமை ஏற்றுமதியிலும் மந்த நிலை உள்ளது. ஜூன் 2013-க்குள் 1 கோடி டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய வேண்டும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதுபோல் கோதுமை ஏற்றுமதிச் சந்தையில் விலகியுள்ள ரஷியா, உக்ரைன் இடத்தை இந்தியா பற்றிக்கொண்டு நல்ல விலையைப் பெறும் அரிய வாய்ப்பை இழக்காமல் இருக்க மாதம் 10 லட்சம் டன் ஏற்றுமதிக்கு முயல வேண்டும். தாமதித்தால் ஆஸ்திரேலியா, அர்ஜென்டீனா மேற்படி காலி இடத்தைப் பிடித்துவிடும். லாபகரமான விலைக்கு வழியிருக்காது. அடுத்த ஜூன் 2013-க்குப்பின் விலை சரிய வாய்ப்புள்ளது.

÷ஜூன் 2013 ஐ நெருங்கும்போது இந்தியாவில் கோதுமை இருப்பு 6.1 கோடி டன்கள் என்ற செய்தியே உலக கோதுமை விலை வீழ்ச்சிக்கு வித்திட்டுவிடும். கோதுமை ஏற்றுமதி முழுக்கவும் "ஓ.ஜி.எல்." (ஓபன் ஜெனரல் லைசென்ஸ்) - அதாவது அரசின் பொது உரிமத்தில் நிகழ்வதால், தேவைக்கு மேல் இருப்பு வைப்பதைத் தவிர்த்து உள்ளூரில் வெளி அங்காடிகளுக்கும் தென்னகத்தில் மிகுந்துள்ள கோதுமை உருட்டுமாவு ஆலைகளுக்கும் மலிவு விலை கோதுமையை வழங்கி லாபம் பெறவேண்டும்.

÷உணவுக் கார்ப்பரேஷனிடம் பழைய கோதுமை இருப்பு 2010-11, 2011-12 ஆண்டுகளில் கொள்முதல் செய்தவை - கெட்டுப்போகும் சூழ்நிலையில் உள்ளதைத் தனியார் ஏற்றுமதிக்கும் அனுமதிக்கலாம். வால்மார்ட் வரும்வரை வைத்திருக்கக்கூடாது.

இப்படிப்பட்ட இரண்டாம் தர கோதுமை மேற்கு ஆசியா, கிழக்கு ஆசியா கோதுமை உருட்டு ஆலைகளுக்குத் தேவைப்படலாம். உகந்தவை மனித உணவாகவும், மற்றவை சாராயம் அல்லது கால்நடைத் தேவைக்கும் பயனுறலாம்.

இப்படி வெளி அங்காடிகளுக்குத் தாராளமாக கோதுமையை வழங்கும்போது உள்ளூரில் உணவுப் பணவீக்கத்தையும் குறைத்துக் கொண்டு அன்னியச் செலாவணிப் பற்றாக்குறைக்கும் சற்றுப் பங்களித்து "இடைவெளியை'க் குறைக்கலாம்.

÷அரிசி ஏற்றுமதியில் கோதுமையில் காட்டப்படாத வேகம் உள்ளது. பாசுமதி அரிசி ஏற்றுமதி வழக்கப்படியானது. ஆனால் பாசுமதியல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதியில் மாபெரும் சாதனையே நிகழ்ந்துள்ளது. உலக அரிசி வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்த தாய்லாந்தை இந்தியா வீழ்த்திவிட்டது. அரிசியில் மட்டும் ஏற்றுமதி அதிகரித்ததற்கு தனியார் உரிமம் முக்கியக் காரணமாயிருக்கலாம்.

கடந்த 12 மாதங்களில் மொத்த அரிசி ஏற்றுமதி ஒரு கோடி டன்னைத் தொட்டுவிட்டது. வரும் 12 மாதங்களில் 1 கோடி டன் அரிசி ஏற்றுமதி 1.5 கோடி டன்னாகக் குறி இலக்கு நிர்ணயமாகிவிட்டது.

÷தமிழ்நாட்டில் இலவச அரிசி தாராளமாக வழங்கப்பட்டாலும் வெளி அங்காடியில் அரிசி விலை உயர்வைத் தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குரிய முக்கியமான காரணம் ரேஷன் இலவச அரிசியின் "தரம்' போற்றும்படி இல்லை. இலவச அரிசியைப் பெறுபவர்கள் நிஜமாகவே சமைக்கிறார்களா?, ஐந்து ரூபாய்க்கு இட்லிக் கடைக்கு விற்கிறார்களா?

மாடு வளர்ப்பவர்கள் மாவாக அரைத்து அடர் தீவனமாக வழங்கும் வாய்ப்பு அதிகம். மாட்டுக்கு ஜீரணம் ஆகவேண்டுமானால் அதை மேலும் தவிட்டுடன் கலந்து "பாலிஷ்' செய்து, சம அளவு கம்பு அல்லது வெள்ளைச் சோள மாவில் கலந்து 10 சதவீதம் அடர்தீவனம் + 90 சதவீதம் பசும்புல் + வைக்கோல் வழங்கினால் மாட்டுக்குக் கறவை கூடும் வாய்ப்பு உண்டு என்பது எங்கள் அனுபவம்!

÷தமிழ்நாட்டில் வட மாவட்டங்களில்தான் தரமான அரிசி உற்பத்தி உண்டு. வெள்ளைப் பொன்னி, வெள்ளைக்கார் ஆகியவற்றுக்கு அங்காடி மதிப்பு உண்டு. தஞ்சாவூர் - காவேரி டெல்டா பகுதியில் விளையும் ராஜராஜன், ஏ.டி.டி. 36 போன்ற குறுகிய கால நடுத்தர ரகம் அரசுக் கொள்முதலுக்காகவே தயாராகிறது.

தென் மாவட்டங்களில் தரமான அரிசி உற்பத்தி குறைவு. உண்மையைச் சொல்வதானால் பெரும்பாலான தமிழர் உண்ணும் "டீலக்ஸ்' பொன்னி ரகம் ஆந்திரம், கர்நாடகம், மாகராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வருவதால்தான் இந்த விலை ஏற்றம்.

÷உணவுப் பாதுகாப்பு மசோதா பற்றி கவலைப்பட வேண்டிய நாடு இந்தியா அல்ல. இந்தியாவில்தான் கோதுமையும் அரிசியும் மலையெனக் குவிந்துள்ளதே! பொது வினியோகத் தேவையை உணவுப் பாதுகாப்புக்காக மேலும் சற்றுக் கூட்டினாலும்கூட உணவுத் தேக்கம் இந்தியாவில் தவிர்க்க முடியாத தவறாகிவிட்டது. வாழ்க பாரதம்!

**போதிய மழையின்மையால் திருந்திய நெல் சாகுபடி: விவசாயிகளுக்கு ஆட்சியர் வேண்டுகோள்**

போதிய மழை பெய்யாததால் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ள வேண்டும் என ஆட்சியர் இரா. செல்வராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பிசான நெல் சாகுபடி பருவத்துக்கு வழக்கமாக கிடைக்கும் வடகிழக்கு பருவமழை இவ்வாண்டு இதுவரை போதிய அளவு கிடைக்கவில்லை. 30 முதல் 40 சதவீதம்வரை மட்டுமே கிடைத்துள்ளது. அணைகளிலும் நீர்மட்டம் குறைவாக உள்ளது.

இதனால், அதிக இடங்களில் நாற்றுவிடவும், நடவு செய்யவும் இயலாமல் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ளது. பயிர்களை இறுதிவரைக் காப்பாற்றவும் உறுதி இல்லாத நிலையில் போதிய நீராதாரம் இல்லை.

இந்நிலையில், நீராதாரங்களை சிக்கனமாகப் பயன்படுத்த கண்டறியப்பட்ட வழிமுறைகளில் திருந்திய நெல் சாகுபடி முறை மிகவும் பயன் தரும்.

10 நாள் நாற்றுகளை நடவு செய்தல், 9-க்கு 9 இஞ்ச் இடைவெளியில் நாற்று நடுதல், 1 இஞ்ச் உயர அளவுக்கு மட்டுமே நீர்ப்பாய்ச்சுதல், கோனாவீடர் அல்லது பரவ் வீடர் (எந்திரக் களையெடுப்புக் கருவி) மூலம் களைகளை வயலில் மக்கச் செய்தல் ஆகிய 4 வழிமுறைகளும் பயன் தரும்.

இதனால், இளம் நாற்றுகள் பிடுங்கி நடுதல் முறையில் ஏற்படும் வாடித் தழைத்தல் நிலைமை தவிர்க்கப்படும்.

கலப்பாக நடுவதால் அதிக சூரிய ஒளி கிடைத்தல், களை இயந்திரம் பயன்படுத்த ஏதுவான சூழ்நிலை கிடைக்கும். 1 இஞ்ச் உயரத்துக்கு நீர் கட்டுவதால் நிலத்தடி காற்றோட்டம், வேர்கள் சுவாசம், வேர் அழுகுதல் தவிர்க்கப்படும். அதிக தூர்கள் கட்டுதல், அதிக பயனுள்ள தூர்கள், எலி, புகையான் தாக்குதல் குறைவு, அதிக வேர் வளர்ச்சி களைகளால் நிலப்போர்வை அமைதல், நிலத்தில் நுண்ணுயிர்கள் செயல்பாடு அதிகரித்தல், நிறைவாக மகசூலும் கிடைக்கும்.

அதிக இடங்களில் நாற்று பாவப்பட்டு 20 நாள் ஆன நிலையில் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்ற முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இச் சூழ்நிலையில் நாற்று குறித்து பெரிதாக எண்ண வேண்டாம். அதிக இடைவெளியில் வரிசை நடவு, குறைந்த அளவு நீர் பாய்ச்சல் முறையில் வயல் பராமரிப்பு, களையெடுப்புக் கருவிகள் மூலம் களைகளை மக்கச் செய்தல் ஆகிய முறைகளை விவசாயிகள் கடைப்பிடித்தால் அதிக பயன்பெறலாம் என்றார் ஆட்சியர்.

**அதிக யூரியாவால் நெற்பயிரில்  நோயின் தாக்கம் அதிகரிக்கும்**

நெற்பயிரில் தழைச்சத்தாக அளிக்கும் யூரியா உரத்தை அதிகமாக இட்டால், நோயின் தாக்கம் அதிகரிக்கும் என்றார் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய நோயியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர்.பி. செப்ந்தர்ராஜன்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

நெற்பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான இலைப்பேன், தண்டுதுளைப்பான், இலைச்சுருட்டுப்புழு, புகையான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் கதிர்நாவாய் பூச்சிகளை ஒருங்கிணைந்த முறைகளான விதை நேர்த்தி, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறியமைத்து கட்டுப்படுத்தலாம். பூச்சிக்கொல்லிகளை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பொருளாதார சேத நிலை ஏற்படும் பட்சத்தில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

தழைச்சத்து உரமான யூரியாவை தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதுதான் அனேக பூச்சி மற்றும் நோய்களுக்கு காரணமாக உள்ளது. எனவே, தழைச்சத்தினை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மூன்று அல்லது நான்கு தவணைகளாகப் பிரித்து இடுவதன் மூலம், பூச்சி மற்றும் நோய்கள் வருவதைத் தவிர்க்கலாம் என்றார் அவர்.

முன்னதாக, பயிற்சியை நிலையத்தின் தலைவர் க. வைரவன் தொடக்கிவைத்தார்.

வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய நோயியல் துறைப் பேராசிரியர் முனைவர் த. தினகரன் பேசினார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கோரி விரைவில் சென்னையில் போராட்டம்: கே.பாலகிருஷ்ணன்**

கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ.3,500 ஆக உயர்த்தி வழங்கக் கோரி சென்னை கோட்டை முன் விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கூறினார்.

÷ஈரோடு மூலப்பாளையத்தில் புதன்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டில் பங்கேற்க வந்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

÷உரங்களின் விலை கடந்த ஓராண்டில் பல மடங்கு உயர்ந்துள்ளது. வேலையாள்கள் பற்றாக்குறை காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. இந்நிலையில், கரும்பு கொள்முதல் விலையை ரூ.2,350 என மாநில அரசு அறிவித்துள்ளது ஏமாற்றம் அளிக்கிறது.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.3,500 உயர்த்தி மாநில அரசு அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிற விவசாயிகள் சங்கங்களை ஒருங்கிணைத்து சென்னை கோட்டை முன் டிசம்பரில் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

**முட்டைக் கொள்முதல் விலை ஒரே நாளில் 35 காசுகள் சரிவு!**

சபரிமலை சீசன் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து, முட்டை விற்பனையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், நாமக்கல் மண்டலத்தில் முட்டைக் கொள்முதல் விலை புதன்கிழமை 35 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.2.75 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

தீபாவளிப் பண்டிகையையொட்டி தமிழகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் முட்டை தேவைப்பாடு அதிகரித்தது. இதையடுத்து, முட்டைக் கொள்முதல் விலை நவம்பர் 9-ஆம் தேதி 25 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.30 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், தீபாவளி முடிந்ததும் 15 காசுகள் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில், கார்த்திகை மாதம் பிறந்து சபரிமலை சீசன் தொடங்கியது. இதையடுத்து, தமிழகம், கேரள மாநிலங்களில் முட்டை தேவைப்பாடு குறைந்ததால், நவம்பர் 17-ஆம் தேதி கொள்முதல் விலை 15 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.3 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதற்கிடையே, பிற மண்டலங்களில் நிலவிய விலையை கணக்கிட்டு பின்னர் 10 காசுகள் உயர்த்தப்பட்டது.

இதுவரை நாமக்கல் மண்டலத்தில் சுமார் 6 கோடி முட்டைகள் தேக்கமடைந்துள்ளன. இந்த நிலையில், புதன்கிழமை (நவம்பர் 28) ஒரே நாளில் முட்டைக் கொள்முதல் விலை 35 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.2.75 ஆக நிர்ணயிக்கப்பட்டது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் (என்இசிசி) கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பிற மண்டலங்களில் முட்டை கொள்முதல் விலை: சென்னை -ரூ.3.10, பெங்களூர் -ரூ.3.05, மைசூர் -ரூ.3.02, ஹைதராபாத் -ரூ.3.02, மும்பை -ரூ.3.34, விஜயவாடா -ரூ.2.97, கொல்கத்தா -ரூ.3.15, பர்வாலா -ரூ.2.95, தில்லி -ரூ.3.27.

**அதிக யூரியாவால் நெற்பயிரில் நோயின் தாக்கம் அதிகரிக்கும்'**

நெற்பயிரில் தழைச்சத்தாக அளிக்கும் யூரியா உரத்தை அதிகமாக இட்டால், நோயின் தாக்கம் அதிகரிக்கும் என்றார் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய நோயியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர்.பி. செப்ந்தர்ராஜன்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

நெற்பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான இலைப்பேன், தண்டுதுளைப்பான், இலைச்சுருட்டுப்புழு, புகையான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் கதிர்நாவாய் பூச்சிகளை ஒருங்கிணைந்த முறைகளான விதை நேர்த்தி, விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறியமைத்து கட்டுப்படுத்தலாம். பூச்சிக்கொல்லிகளை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பொருளாதார சேத நிலை ஏற்படும் பட்சத்தில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

தழைச்சத்து உரமான யூரியாவை தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதுதான் அனேக பூச்சி மற்றும் நோய்களுக்கு காரணமாக உள்ளது. எனவே, தழைச்சத்தினை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மூன்று அல்லது நான்கு தவணைகளாகப் பிரித்து இடுவதன் மூலம், பூச்சி மற்றும் நோய்கள் வருவதைத் தவிர்க்கலாம் என்றார் அவர்.

முன்னதாக, பயிற்சியை நிலையத்தின் தலைவர் க. வைரவன் தொடக்கிவைத்தார்.

வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய நோயியல் துறைப் பேராசிரியர் முனைவர் த. தினகரன் பேசினார்.

**அடவிநயினார் அணை  ஒரே நாளில் 8 அடி உயர்வு**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அருகே உள்ள அடவிநயினார் அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 8அடி உயர்ந்துள்ளது.

அடவிநயினார் அணையின் மொத்தக் கொள்ளளவு 132 அடி. இதில் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி 74 அடி அளவில் தண்ணீர் இருந்தது. செவ்வாய்க்கிழமை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக புதன்கிழமை காலை நிலவரப்படி 8 அடி உயர்ந்து 82 அடியாக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தற்போது விநாடிக்கு 170 கன அடிவீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. விவசாயத்துக்காக விநாடிக்கு 25 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

தினமலர்

**வரும் 4ல் புதுடில்லியில் மாநாடு: விவசாயிகள் கரும்போடு பயணம்**

கும்பகோணம்: ரங்கராஜன் கமிட்டி பரிந்துரையில் கரும்பு விவசாயிகளுக்கு சலுகைகள் அறிவிக்காமல், கரும்பு ஆலை அதிபர்களுக்கு சலுகைகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள அந்த பரிந்துரையை, மத்திய அரசு ஏற்று, அமல்படுத்தகூடாது என வலியுறுத்தி, வரும், 4ம் தேதி புதுடில்லியில் பாராளுமன்றம் நோக்கி கரும்பு விவசாயிகள் பேரணி நடக்கிறது. வட இந்தியாவில் உள்ள ராஷ்டிரிய கிசான் மஸ்கான் சங்கதன் அமைப்பு (கரும்பு விவசாயிகள்) சார்பில், இந்தியா முழுவதும் கரும்பு விவசாயிகளை போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர். இந்த அழைப்பின்படி, தமிழகத்திலிருந்து, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின், தஞ்சை மாவட்ட செயலாளர் சுந்தர விமலநாதன் தலைமையில், 5 பெண்கள் உள்ளிட்ட, 26 கரும்பு விவசாயிகள் கையில் கரும்புகளோடு, நேற்று காலை, கும்பகோணத்திலிருந்து சோழன் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் சென்னைக்கு புறப்பட்டனர். அங்கிருந்து புதுடில்லி செல்கின்றனர். காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத்தின் தஞ்சை மாவட்ட செயலாளர் சுந்தரவிமலநாதன் கூறியதாவது: மத்திய அரசு கரும்பு டன் ஒன்றுக்கு ஆதார விலையாக, 1,700 ரூபாய் அறிவித்துள்ளது. ஆனால் குறைந்தபட்ச விலையாக, மூன்றாயிரம் ரூபாய் அறிவிக்க வேண்டும். மாநில அரசு தன்னுடைய பரிந்துரை விலையாக, 1,000ம் அறிவிக்க வேண்டும். மொத்தம் கரும்புக்கு டன் ஒன்றுக்கு, நான்காயிரம் ரூபாய் விலை அறிவித்து, வழங்க வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு எதிரான ரங்கராஜன் கமிட்டி பரிந்துரையை, மத்திய அரசு அமல்படுத்திட கூடாது என்பதை வலியுறுத்தி, வரும் டிச. 4ம் தேதி புதுடில்லியில் நடக்கும் போராட்டத்தில் பங்கேற்க, தமிழகம் சார்பில் கரும்பு விவசாயிகள் செல்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**பிசான சாகுபடிக்கு பாப்பன்கால்வாயில் தண்ணீர்: மாவட்ட கலெக்டருக்கு விவசாயிகள் கோரிக்கை**

திருநெல்வேலி : பிசான பருவ சாகுபடிக்கு பாப்பன் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் மாவட்ட கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் சார்பில் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவதுநெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் கடையம் அருகே ராமநதி அணைக்கட்டு உள்ளது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 83 அடி. இதில் தற்போது 78 அடி தண்ணீர் உள்ளது. இந்த அணையின் கீழ் 3 பாசன கால்வாய் உள்ளது. இதில் கடைசி கால்வாயாக பாப்பன் கால்வாய் விளங்குகிறது. இந்த பாப்பன் கால்வாயின் கீழ் 12 குளங்கள் பாசன வசதி பெறுகின்றன. பொட்டல்புதூரில் துவங்கி, முக்கூடல் இடைகால் வரை பாப்பன் கால்வாய் ஓடுகிறது. 1250 ஏக்கர் நிலங்கள் இந்த கால்வாய் மூலம் பாசன வசதி பெறுகிறது.தென்மேற்கு பருவமழையின் போது சரியாக மழை இல்லாததால் ராமநதி அணைக்கட்டு நிரம்பவில்லை. அந்த பகுதியில் விவசாயிகள் கார் சாகுபடியும் செய்யவில்லை. வடகிழக்கு பருவமழை ஓரளவு பெய்துள்ளதால் அணையில் போதுமான அளவு தண்ணீர் இருப்பதாலும், பாப்பன் கால்வாய்க்குட்பட்ட விவசாய நிலங்களில் சில விவசாயிகள் மட்டுமே பிசான பருவ சாகுபடிக்கு நாற்று பாவியுள்ளனர். பாப்பன் கால்வாயின் கீழுள்ள 12 குளங்களும் கால்வாசி கூட நிரம்பாததால் விவசாய நடவு பணிகளை மேற்கொள்வதில் விவசாயிகளுக்கு தயக்கம் ஏற்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையும், மாவட்ட நிர்வாகமும் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி பாப்பன் கால்வாயில் முறை வைத்து தண்ணீர் திறந்துவிட்டால் 12 குளங்களும் நிரம்புவதோடு, 1250 ஏக்கரில் பிசான பருவ சாகுபடி தங்கு தடையின்றி நடைபெறும். எனவே பாப்பன் கால்வாயில் முறை வைத்து 5 நாட்களுக்கு தொடர்ச்சியாக பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்பு நலத் திட்ட உதவிகள் 117 பேருக்கு ரூ.3.32 லட்சம் நிதி வழங்கல்**

திருநெல்வேலி : தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 117 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 32 ஆயிரத்து 650 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை நெல்லை எம்.எல்.ஏ., நயினார் நாகேந்திரன் வழங்கினார். தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நெல்லை எம்.எல்.ஏ., அலுவலகத்தில் நடந்தது. இதில் 14 நபர்களுக்கு ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபாயையும், இயற்கை மரணம் அடைந்த 6 பயனாளிகளுக்கு 77 ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகையையும், கல்வி

உதவித் தொகையாக 16 பயனாளிகளுக்கு 32 ஆயிரத்து 15 ரூபாயையும் எம்.எல்.ஏ., நயினார் நாகேந்திரன் வழங்கினார். முதியோர், முதிர்கன்னி, விதவை, ஊனமுற்றோர் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகையாக 73 பேருக்கு 73 ஆயிரம் ரூபாயும், காசநோய் உதவித் தொகையாக 3 பயனாளிகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும், எச்.ஐ.வி.உதவித் தொகையாக 3 பயனாளிகளுக்கு 3 ஆயிரம் ரூபாயும், நலிந்தோர் உதவித் தொகையாக 2 பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 117 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 32 ஆயிரத்து 650 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை எம்.எல்.ஏ., நயினார் நாகேந்திரன் வழங்கினார். இதில் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் சொர்ணராஜ், துணைமேயர் ஜெகநாதன், மானூர் சேர்மன் கல்லூர் வேலாயுதம், மாநகராட்சி மண்டல தலைவர்கள் மோகன், மாதவன், ஹைதர்அலி, கவுன்சிலர்கள் வண்ணை கணேசன், ஏ.எஸ்.சங்கர், முத்துராஜ், கட்சி நிர்வாகிகள் ஜாலி, வெங்கடசுப்பிரமணியன், காந்திமதிநாதன், நவ்சாத், சுப்பையா, இசக்கி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் பயிரில் கோனாவீடர் மூலம் களை நீக்கும் முறை விளக்கம்**

தென்காசி : பிசான நெல் சாகுபடியில் கோனாவீடர் மூலம் களை நீக்கும் முறை பற்றி தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கியுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தென்காசி, இலஞ்சி, குற்றாலம், வல்லம், கீழப்புலியூர் பகுதிகளில் பிசான நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. நெல் பயிர் நட்ட 10ம் நாள், 20ம் நாள், 30ம் நாள் கோனாவீடர் மூலம் களை நீக்கம் செய்திட வேண்டும். இக்கருவி மூலம் நீக்கப்படும் களைகள் உரமாக்கப்படுகிறது. நிலம் மிருதுவாகி நெல் பயிர் வேர்கள் வளர்ச்சி அடையும்.மேலும் பயிரில் சிம்புகள் அதிகம் வெடித்து பயிர்கள் நல்ல முறையில் வளர்ச்சி அடையும். இதனால் கோனாவீடர் கருவியை பயன்படுத்தி நெல் பயிரில் களை நீக்கம் செய்து அதிக மகசூல் பெறுமாறு விவசாயிகளை உதவி வேளாண்மை இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மலர் சாகுபடியாளர் சங்கம் சார்பில் மனு**

ஊட்டி:நீலகிரி மாவட்ட சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் விசுவநாதன், செயலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், ஊட்டி பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளரிடம் வழங்கிய மனு: நீலகிரியில் கொய்மலர் சாகுபடி நலிவடைந்துள்ள நிலையில், வங்கி கடன் தவணையை செலுத்த முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். வங்கி கடனை செலுத்த ஓரிரு ஆண்டுகள் அவகாசம்

வழங்க வேண்டும், என கேட்டிருந்தோம்.
மாவட்ட கலெக்டர் தலைமையில் நடந்த வங்கியாளர்கள் கூட்டத்தில், கடன் வசூலிப்பு நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறும் கோரிக்கை வைத்தோம். அனைத்து வங்கிகளும் இதை ஏற்று கொண்ட நிலையில், ஊட்டி பாரத ஸ்டேட் வங்கியின் விவசாய கள அலுவலர், வசூலிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, விசுவநாதன், கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளனர்.

**பசு தீவன உற்பத்தி பயிற்சி விவசாயிகள் திரளாக பங்கேற்பு**

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரத்தில் பசுத்தீவன உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.
கிருஷ்ணராயபுரம் திருகண்மல்லீஸ்வரர் கோவில் அருகே சமுதாயக்கூடத்தில், யூனியன் கால்நடை மருத்துவத்துறை மூலம், பசு தீவன உற்பத்தி பற்றிய பயிற்சி முகாம் நடந்தது.
கிருஷ்ணராயபுரம் கால்நடை உதவி டாக்டர் கலைமணி தலைமை வகித்து, பசு தீவன பயிர் சாகுபடி பற்றியும், கால்நடைகள் பற்றியும், விவசாயிகளிடம் பேசினார்.
கிருஷ்ணராயபுரம் யூனியனுக்குட்பட்ட மகிளிப்பட்டி, மகாதனபுரம், குப்புரெட்டிப்பட்டி, சேங்கன்,பாலராஜபுரம், மணவாசி பகுதியில் இருந்து, நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். 50 ஏக்கர் பரப்பில் கிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதியில் உள்ள விவசாய நிலத்தில், பசுத்தீவன பயிர் சாகுபடி செய்யப்பட்டதாக முகாமில் தெரிவிக்கப்பட்டது.

**நவீன மலர் சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி: வம்பன் நிலையம் அழைப்பு**

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், நவீன மலர் சாகுபடி முறைகள் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நாளை நடக்கிறது.
இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியை கவிதா வெளியிட்டுள்ள அறிக்கை:
புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்தவும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் ஏதுவாக வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், விவசாயிகளுக்கு அவ்வப்போது நவீன பயிர் சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, மலர் சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தமட்டில் ஆலங்குடி, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை, இலுப்பூர் தாலுகா பகுதிகளில், அதிகளவு மலர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பூச்சி மற்றும்

நோய் தாக்குதல்களால் மலர் சாகுபடியில் விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைப்பதில்லை. இதர பயிர் சாகுபடியைப் போன்று, மலர் சாகுபடியிலும் குறிப்பாக, சம்பங்கி பூ, மல்லிகை சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விதமாக, நவீன தொழில்நுட்ப முறைகள், புதிய ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்த பயிற்சி முகாம் நாளை நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மலர் சாகுபடி செய்துவரும் விவசாயிகள் மற்றும் மலர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் இதில் பங்கேற்கலாம்.

**மானிய விலையில் வேளாண் இயந்திரம்:மாவட்ட கலெக்டர் தகவல்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மானிய விலையில், விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:

தர்மபுரி மாவட்டத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், உற்பத்திச் செலவை குறைக்கவும், வேளாண் துறையை நவீனப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, பவர்டில்லர், பல்வகை தானிய கதிரடிக்கும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், தெளிப்பான்கள், ரோட்டோவேட்டர் மற்றும் இணக்கமான பண்ணை கருவிகள், அரசு நிர்ணயம் செய்துள்ள மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இத்திடத்தின் கீழ் நடப்பாண்டு, தர்மபுரி மாவட்டத்துக்கு, 137 எண்ணிக்கையில், 36 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், பல்வகை தானியங்கள் கதிரடிக்கும் இயந்திரம், அதிகபட்சமாக, ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாயும், களையெடுக்கும் கருவி அதிகபட்சம், 50 ஆயிரம் ரூபாயும், களையெடுக்கும் கருவி, 20 ஹெச்.பி, ஒரு லட்சத்து, 25 ஆயிரம் ரூபாயும், பண்ணை கருவிகள் அதிகபட்சம், 5,000 ரூபாயும், பவர் டில்லர் அதிகபட்சம், 45 ஆயிரம் ரூபாயும், உழுவை இயந்திரங்கள், 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு, பல்வகை தானிய கதிரடிக்கும் இயந்திரத்துக்கு, அதிகபட்சமாக, ஒரு லட்சத்து, 80 ஆயிரம் ரூபாயும், களையெடுக்கும் கருவிக்கு (8 ஹெச்.பி.,) அதிகபட்சமாக, 60 ஆயிரம் ரூபாயும், களையெடுக்கும கருவிக்கு (20 ஹெச்.பி.,), ஒரு லட்சத்து, 50 ஆயிரம், பவர் டிரில்லருக்கு, ஒரு லட்சம், உழுவை இயந்திர கருவிகளுக்கு, 20

ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, 18 லட்சத்து, 10 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயன் அடைய விரும்பும் விவசாயிகள், சாதாரண வெள்ளை தாளில், பெயர், முகவரி, நிலத்தின் சர்வே எண், நிலத்தின் பரப்பு, சிட்டா, அடங்கல் வரைம் மற்றும் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ, தாங்கள் விரும்பும் நிறுவனம் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்) மற்றும் ரோட்டோவேட்டர் வேண்டுபவர்கள், இந்த ஆவணங்களுடன், டிராக்டரின் பதிவு சான்று நகல் ஆகிவயற்றை இணைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை , "செயற்பொறியாளர் (வே,பொ), துணை இயக்குனர் அலுவலகம், கலெக்டர் அலுவலக வளாகம், தர்மபுரி என்ற முகவரிக்கும், உதவி இயக்குனர் (வே.பொ), கலெக்டர் அலுவலகம், தர்மபுரி, உதவி செயற்பொறியாளர் (வே.பொ) கோவிந்தசாமி நகர், அரூர் ஆகிய முகவரியில் வழங்க வேண்டும்.இந்த தகவலை கலெக்டர் லில்லி தெரிவித்துள்ளார்.

தினகரன்

**கர்நாடகம் கைவிரிப்பு டெல்டா விவசாயிகள் அதிர்ச்சி**



திருவாரூர் : காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்துவிட்டதால் டெல்டா விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது தொடர்பாக விவசாயிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு: ராணுவ உதவியுடன்... இது குறித்து விவசாய சங்க கூட்டமைப்பு தலைவர் சேரன் கூறுகையில், "ஜெயலலிதா, ஜெகதீஷ் ஷெட்டர் பேச்சு மூலம் தண்ணீர் கிடைக்கும், அதன் மூலம் சம்பா நெற்பயிர் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் தண்ணீர் திறந்துவிடும் நிலையில் இல்லை என்று கூறியிருப்பது டெல்டா மாவட்ட விவசாயிகளை தற்கொலைக்கு தூண்டும் செயலாகும். உடனடியாக மத்திய அரசு தலையிட்டு கர்நாடக அரசை கலைத்துவிட்டு ராணுவத்தின் உதவியுடன் கர்நாடக அணைகளில் உள்ள தண்ணீரை தமிழகத்திற்கு திறந்துவிட வேண்டும்" என்றார்.

"விவசாயிகளை ஏமாற்றக் கூடாது": திருவாரூர் மாவட்ட விவசாயிகள் மன்ற செயலாளர் என்.வி.சுந்தரம் கூறுகையில்,"டெல்டா மாவட்ட சம்பா பயிர்களை காப்பாற்ற இனி மத்திய, மாநில அரசுகள் பேச்சுவார்த்தை, மேல்முறையீடு போன்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்து உடனடியாக தமிழகத்திற்கு தண்ணீர் பெற்றுத்தரக் கூடிய பணிகளை மட்டுமே செய்ய வேண்டும். வழக்கு, மேல்முறையீடு என்பதெல்லாம் விவசாயிகளை ஏமாற்றும் செயல்" என்றார்.

பிரதமர் தலையிட வேண்டும்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட துணை செயலாளர் கோட்டூர் பி.ஆர்.பாண்டியன் கூறுகையில், "டெல்டா மாவட்டங்களில் கருகும் சம்பா பயிரை காப்பாற்றவும், விவசாயிகள் தற்கொலையை தடுக்கவும் பிரதமர் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி தமிழகத்திற்கு உரிய நீரை பெற்றுத்தர வேண்டும். சம்பா சாகுபடி யும் இல்லாமல் போனால் விவசாயிகள் குடும்பங்கள் அன்றாட செலவுகளுக்கே திண்டாட வேண்டிய நிலை ஏற்படும்." என்றார்.

தண்ணீர் இல்லை என்றால்... நாகை மாவட்ட தேசிய வேளாண் வளர்ச்சி நவீன விவசாய குழு தலைவர் திருவரசமூர்த்தி கூறுகையில், 'கர்நாடகம் இந்தியாவில்தான் இருக்கிறதா, செயல்படும் மத்திய அரசு என்று ஒன்று உள்ளதா என்ற கேள்வி எழுகிறது. மத்திய அரசு முறையான நடவடிக்கை எடுத்து சம்பா பயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒரு யூனிட் மின்சாரம் கூட வெளிமாநிலத்திற்கு அனுப்ப விடாமல் தடுக்கும் நடவடிக்கையில் தமிழக மக்கள் இறங்குவார்கள்" என்றார்.

கர்நாடக மாநில அரசை தட்டிக்கேட்க ஆளில்லை: மன்னார்குடி ரங்கநாதன் கூறுகையில், "கர்நாடகம் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று பிடிவாதம் பிடிக்கிறது. இதை தட்டி கேட்க கூட ஆள் இல்லை. மத்திய அரசு வேடிக்கை பார்க்கிறது. உள்நாட்டு தண்ணீர் பகிர்வு சட்டம் தெளிவாக உள்ளது. அதற்கு நல்ல சட்ட வலு கொடுக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவை ஏற்பட்டால் பயிர்களை பிரதமர் நேரில் பார்வையிட வேண்டும். மும்முனை மின்சாரமும் இல்லாத நிலையில் சம்பா பயிர்களை காப்பாற்ற முடியாத நிலை உள்ளது" என்றார்.

ரூ.25,000 நஷ்டஈடு

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சுகுமாறன் கூறுகையில், ‘பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் காவிரி டெல்டாவில் இந்த ஆண்டு சம்பா பயிர்கள் காப்பாற்ற முடியாது என்பது உறுதியாகிவிட்டது. எனவே, விவசாயிகள் சாகுபடி செலவு தொகையாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நஷ்ட ஈடாக வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எங்களின் வாழ்வாதாரத்தை காக்க அடுத்த சாகுபடி துவங்கும் வரை மாதமொன்றுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும்Õ என்றார்.